கட்ட வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. காரணம் அங்குள்ள மக்கள் பொது வேலைகளுக்கு வெளியில் செல்ல வேண்டும் என்றால், அந்த ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றின் அகலம் ஒரு கிலோ மீட்டர் இருக்கிறது. அப்படி ஆற்றைக் கடக்க வேண்டிய அவசியம் நேரிடும்போது, சுற்றிக்கொண்டு 7 மைல் கடந்துசெல்ல வேண்டியதிருக்கிறது. ஆகையினால் உடனடியாக, ஒரு மீட்டர் அகலம் உள்ள அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்படுமேயானால் அது அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு அங்கே பாலம் அமைக்கும் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் நீர்வழி அகலம் 360 மீட்டராகும். மேற்படி இடத்தில் தாமிரபரணி ஆற்றில் ஓர் முழ்கு பாலம் கட்டவும் அணுகு சாலைகள் அமைக்கவும் தோராயமாக ரூ. 56 இலட்சம் தேவைப்படும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்ட பாலம் கட்ட ரூ. 120 இலட்சம் தேவைப்படும். எந்தவிதமான அனுமதிக்கப்பட்ட திட்டத்திலும் இது இடம்பெறவில்லை. ஆகவே, நிதிநிலை சரியானவுடன், இது கவனிக்கப்படும்.

[முற்பகல் 9—20]

திரு. எஸ். என். இராமசாமி : ஒட்டப்பிடாரம்-சாத்தான் குளம் இணைப்புப் பாதையை இந்தப் பாலத்தில் ஏற்படுத்த அனைத்து அதிகாரிகளும் வந்து ஆய்வு வேலைகள் செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆய்வு செய்தபின்னால் தான் இந்தத் தோராயமான மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சின்னசேலத்திலுள்ள அரசு மருந்தகம்.

* வினா எண். 820—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சின்னசேலத்தில் உள்ள அரசு மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

1981 ஏப்ரல் 21]

(இ) மேற்படி மருந்தகத்தில் கூடுதலான பெண் டாக்டர் நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ் வினாக்களுக்கு இடமில்லை.

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 821— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) காஞ்சிபுரம் மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி ஏற்கனவே திறக்கப்பட்டு, நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற படுக்கைகள் ஒதுக்கப்பட்டு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) இக் கேள்வி எழாது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : காஞ்சீபுரம் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பகுதியில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் இல்லை என்பதை நான் நேரடியாக அந்த மருத்துவமனைக்குச் சென்றபோது அறிந்தேன். ஆகவே அங்கே நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஒவ்வொரு தலைமை மாவட்ட மருத்துவமனையிலும் 15 படுக்கைகள் சித்த வைத்தியத்திற்காக ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள்